இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார். (மாற்கு :42-45)

# உலக மறைப்பரப்பு ஞாயிறு

## திருத்தந்தை வழங்கியச் செய்தி - சுருக்கம்



அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இந்த ஆண்டின் உலக மறைபரப்பு ஞாயிறுக்குரிய கருப்பொருளாக மத்தேயு நற்செய்தியில் காணப்படும் ‘திருமண விருந்து’ உவமையைத் தெரிவு செய்துள்ளேன். திருமண விருந்துக்கு அழைப்புப் பெற்றவர்கள் அந்த அழைப்பை நிராகரித்துவிட்ட போது, உவமையில் வரும் முதன்மைப் பாத்திரமான அரசர், தம் பணியாளர்களிடம், எனவே நீங்கள் போய் சாலையோரங்களில் காணும் எல்லாரையும் திருமண விருந்துக்கு அழைத்து வாருங்கள் (மத் 22:9) என்று கூறுகிறார்.இந்த உவமையின் சூழமைவு மற்றும் இயேசுவின் வாழ்க்கைச் சூழலை வைத்து இந்த நற்செய்திப் பகுதி பற்றிச் சிந்திக்கும்போது நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றிய முக்கியக் கூறுகளை நாம் தெளிந்து தேரந்திட முடியும். கிறிஸ்துவின் மறைபரப்பு பணியாளர்கள் என்ற முறையில் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைபரப்புப் பணி என்ற முப்பரிமாணக் குறிக்கோளுடனான கூட்டியக்கப் பயணச் சூழலில் இன்றைய உலகில் நற்செய்தி அறிவிப்பப்பணி உற்சாகம் பெற வேண்டும்.

### நீங்கள் போய் அழைத்து வாருங்கள்

மறைபரப்புப் பணி என்பது ஆண்டவர் வழங்கும் விருந்துக்கு அனைவரையும் விரைந்து அழைத்து வருவதாகும். அரசர் தம் பணியாளரருக்கு இடும் ஆணையில் வரும் ‘நீங்கள் போய் ‘அழைத்து வாருங்கள்’ என்ற சொற்கள் மறைபரப்புப் பணியின் மையப் பண்பை வெளிப்படுத்துகின்றன. மறைபரப்புப் பணி என்பது எல்லாரும் இறைவனைச் சந்தித்து, அவரோடு உறவுகொள்ள, பணியாளர் ஆரவமுடன் அனைவரையும் அணுகி அவர்களை அழைப்பதாகும். இறையாட்சியின் மகிழ்ச்சியில் பங்குகொள்ள அவர்களை இடைவிடாது அழைத்துக்கொண்டே இருக்கிறார ஆண்டவர். அதற்காக ஆர்வமுடன் தொடர்ந்து பயணப்பட்டுக் கொண்டே இருக்கிறார்.

இவ்வேளையில், கிறிஸ்துவின் அழைப்பை ஏற்று, தங்களுக்கு உரிய அனைத்தையும் துறந்து தங்கள் தாய்நாட்டிலிருந்து புறப்பட்டு நற்செய்தியைப் பெற்றிராத பகுதிகளுக்கு நற்செய்தியைக் கொண்டு சென்ற மறைபரப்புப் பணியாளர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்பு நண்பர்களே, உங்கள் தாராள அர்ப் பணிப்பு ‘நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்’ (மத் 28:19) என்று மொழிந்து தம் சீடர்களைப் பணித்த கிறிஸ்துவின் மறைப்பரப்பு பணியின்பால் நீங்கள் கொண்டுள்ள உள்ளார்ந்த ஈடுபாட்டின் தெளிவான வெளிப்பாடாகும். உலகின் கடை எல்லைவரை நற்செய்திப் பணிக்கென அழைப்புப் பெற்றுள்ள அறைவருக்கும் நம் நன்றி உரித்தாகுக.




### ‘ திருமண விருந்துக்த...

‘திருமண விருந்து’ நிறைவுகாலம் குறித்த உவமையாக உள்ளது. அது இறையாட்சி மலரும் இறுதி மீட்பின் நிழலாகும். “காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” (மாற்கு 1:15) என்று ஆண்டவர் முழங்கினார். அது மறைப்பரப்புக்குத் தொடக்கமாகும். மேலுப் இயேசு கிறிஸ்துவின் மறைபரப்புப் பணி நிறைவுக் காலத்துடன் தொடர்புடையது என்பதுப் புலனாகிறது. தொடக்கக் கால கிறிஸ்தவர்கள் மறைபரப்பின் அவசியத்தை நன்கு அறிந்துச் செயல்பட்டார்கள். இன்றும் அதே அணுகுமுறையுடன் நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபடுவது இன்றியமையாதது. ‘ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்’ என்பதை அறிந்தவர்களுக்கு, மகிழச்சியுடன் நற்செய்தி அறிவிக்க, இந்த அணுகுமுறை பெரிதும் உதவும்.

‘கோவிட் ‘ பெருந்தொற்றுக்குப் பிந்தையக் காலத்தில் தலத் திருஅவைகள், அனைவரும் பாராட்டும் விதத்தில், இறைமக்களின் நற்கருணைக் கொண்டாட்ட பங்கேற்பை ஊக்குவிக்கின்றன நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் மறைப்பரப்புப் பணியை ஈடுபாட்டுடன் தொடர்ந்து ஆற்றும் ஆர்வத்திற்குப் புத்துயிர் ஊட்ட இது மிகவும் அவசியமாகும். ‘ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகிறோம், உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கிறோம்’ என்று ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டத்திலும் அறிக்கையிடுகிறோமே, அந்த உண்மையை மிகுந்த நம்பிக்கையுடனும், உள்ளார்ந்த உற்சாகத்துடனும் அறிக்கையிட வேண்டும்.

யூபிலி 2025 நிகழ்விற்குச் சிறப்பாகத் தயாரிக்க, இறைவேண்டுதல் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஆண்டில் திருஅவை தொடர்ந்தாற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் உங்களை அர்ப்பணியுங்கள். இந்த எதிர்நோக்கோடுதான் இறைவனில் நாம் பெறவிருக்கும் நிலைவாழ்வை நோக்கி, தம் பிள்ளைகளுக்குத் தந்தை இறைவன் தயார் செய்துள்ள ‘ஆட்டுக்குட்டியின் திருமண விருந்து’ நோக்கிப் பயணிக்கிறோம்.

### திருத்தந்தையின் மாதாந்திரக் கருத்து



*அக்டோபர் 2024*

**‘கூட்டு மறைத்தூதுப் பணிக்காக மன்றாட்டு’**

திருஅவையானது அருள்பணியாளர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினரின் கூட்டுப் பகிர்வால் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைத்தூதுப் பணியை ஊக்குவித்து, அனைத்து வழிகளிலும் கூட்டொருங்கிணைப்பின் அடையாளமாகத் தொடர்ந்து நிலைநிறுத்த மன்றாடுவோமாக.

# பெர்மாத்தாங் திங்கி மரியாவின் தூய பெயர் பங்கில் அருங்கொடை மறுமலர்ச்சி

**பினாங்கு, பெர்மாத்தாங் திங்கி:** கடந்த செப்டம்பர் 28 சனி மற்றும் 29 ஞாயிறு ஆகிய இரு தினங்களில் காலை முதல் மாலை வரை பெர்மாத்தாங் திங்கி மரியாவின் தூய பெயர் பங்கு தமிழ் அருங்கொடை மறுமலர்ச்சி செபக் குழுவினரால் தூய ஆவிக்குள் புது வாழ்வு கருத்தரங்கு பங்கு தந்தை லூயிசு லோய் அவர்களின் நல்லாசியுடன் இனிதே



சிறப்பாய் வழிநடத்தப்பட்டது.

பணி ஓய்வு பெற்ற அருள்பணி அகத்தின் வோங் அவர்களால் இறை மன்றாட்டுடனும் ஆசிருடனும் இந்நிகழ்வு துவங்கப்பட்டது. இந்த இரண்டு நாள் கருத்தரங்கு பட்டர்வர்த்,தூய கன்னி மரியாவின் பிறப்பு தேவாலய தமிழ் அருங்கொடை மறுமலர்ச்சி செபக் குழுவினரின் வழிநடத்தலில் நிறைவேறியது என்பது குறிப்பிடத்தக்கது

80 பங்கெடுப்பளார்களுக்கும் அதிகமாக கலந்து கொண்ட இக்கருத்தரங்கு தனி உறவிலும் குடும்ப உறவிலும் மன்னிப்பையும், மன மாற்றத்தையும் அதன் வழி இறைவனுக்கு பணி செய்ய அளிக்கப்படும் முதல் அன்பையும் வெளிபடுத்த அருள் வாய்க்காலாய் ஆசீரோடு அமைந்த ஒரு தருணமாகும்...

ரோஜர் பிரிமுஸ்

# பினாங்கு மைனர் பெசிலிக்காவில் ஆல்ஃபா பயிற்சி நடைபெற்றது

புக்கிட் மெர்தாஜாம் - கடந்த அக்டோபர் திங்கள், 5 சனி, மற்றும் 6 ஞாயிறு ஆகிய தினங்களில், இங்குள்ள புக்கிட் மெர்தாஜம் புனித அன்னாள் மைனர் பெசிலிக்கா திருத்தலப் பங்கு மற்றும் பெர்மாத்தாங் திங்கி, மரியாவின் தூய பெயர் பங்கு ஆகிய இரு பணிக்குழுவினரும் இணைந்து, தொடர்ந்து 6 வாரங்களாக பங்கு கொண்டு வரும் ஆல்ஃபா பயிற்சியின் தியானத்தில் கலந்துகொண்டனர்.

20- க்கும் மேற்பட்டோர் பங்குப் பெற்ற இவ்வார இறுதி தியான நிகழ்வில், இறை இயேசு யார் என்றும், அதன் வழி அவர் வாக்களித்த வல்லமையான தூய ஆவியார் வழி நடத்தி செல்லும் செயல்பாடுகளில் எவ்வாறு மறைப்பணி ஆற்றலாம் என்னும் தெளிவினை அனைவரும் பெற்றனர். இறுதி நாள் வழங்கப்பட்ட முழுமையான ஆல்ஃபா




பங்கெடுப்பாளர் என்னும் அங்கீகரிப்பின் நிறைவில், அனைவரும் புது உத்வேகத்துடன் இறை ஒளி மிளிர்ந்திட இல்லம் திரும்பினர்.

-ரோஜர் பிரிமுஸ்

# அடுத்த ஆண்டு தொடக்கம் 'மறைக்கல்வி ஞாயிறு' ஆகஸ்டு மாதம் கொண்டாடப்படும்

## மலேசிய ஆயர் பேரவையின் அறிக்கை

அன்பார்ந்த இறைமக்களே,

நம் சமூகத்தில் நம்பிக்கையை வளப்படுத்தும் நமது தொடர் பயணத்தில், மறைக்கல்வி ஞாயிறுக்கான நமது கொண்டாட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஒரு முக்கிய மாற்றத்தை உங்களோடு பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மலேசிய மறைக்கல்வி ஆணையத்துடன் ஒன்றிணைந்து ஆழமாகக் கலந்தாலொசித்தப்பின், சனவரி மாதம் இறுதி ஞாயிறன்று கொண்டாடப்பட்டு வந்த மறைக்கல்வி ஞாயிறு, அடுத்த ஆண்டு தொடக்கம் ஆகஸ்டு மாத முதல் ஞாயிறன்று கொண்டாடப்படுவதற்குக் மலேசிய கத்தோலிக்க ஆயர் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இக்கொண்டாட்டத்தை ஆகஸ்டு மாதத்திற்குக் கொண்டுச் செல்வதால் ஆண்டு தொடக்கத்திலேயே நாம் பங்கிலும் தள திருஅவையிலும் பல தரப்பட்ட ளிதர நிகழ்வுகளை மேற்கொள்ள ஏற்புடையதாக இருக்கும் என்று கருதப்படுகிறது. மேலும், மறைக்கல்வி ஞாயிறு கொண்டாட்டத்திற்கான தயாரிப்புப் பணிகளுக்குப் போதுமான கால அவகாசம் இருக்கும்.

இந்தப் புதிய மறைக்கல்வி ஞாயிறுக்கான மாற்றத்தை மனதில் கொண்டு நமது சமூகத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவ நம்பிக்கையைத் தொடர்ந்துத் திடப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த மாற்றத்தை இறை மக்கள் ஏற்க வேண்டும்.

மேலும், மறைக்கல்வி ஞாயிறு ஆகஸ்டு மாதம் முதல் ஞாயிறன்று கொண்டாடப்படுவதால், மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான 'அர்ப்பணிப்புச் சடங்கை' உள்ளூர் ஆயரின் ஒப்புதலுக்கு ஏற்ப ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாளில் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

தொடர்ந்து, மறைக்கல்வி ஆசிரியர்களின் நியமனம் ஆண்டு தொடக்கத்திலோ அல்லது ஆகஸ்டு மாதத்திலோ இடம் பெறலாம். இந்நிகழ்வும் தந்தம் மறைமாவட்டத்தின் குறிப்பிட்ட காரணங்களுக்காக மறைமாவட்டத்தின் ஆயர் ஒப்புதல் அளிக்கலாம்.

இந்த மாற்றமானது ஒவ்வொரு மறைமாவட்டமும் இந்த முக்கிய கொண்டாட்டத்திற்கான தகுந்த நேரத்தை ஆய்ந்தறிய வழிவகுக்கிறது.

இத்தருணத்தில், மலேசிய ஆயர்களின் சார்பில், நம் பெற்றோர்களுக்கும், பாதுகாவலர்களுக்கும், மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் அருள்பணியாளர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றியை நவில்வதில் மகிழ்கிறேன்.

மறைக்கல்வி எனும் முக்கியப் பணிக்கான உங்களின் அர்ப்பணிப்புக்கும் அன்பிற்கும் எனது மனமார்ந்த நன்றியைப் பதிவுச் செய்கிறேன்.

எதிர்காலத்தில் மறைக்கல்வி பணித்துறையில் நல்லதொரு உறுதியான அடித்தளத்தை அமைக்க ஆயர் பேரவையோடு இணைந்துப் பயணிக்க நான் உங்களை அழைக்கிறேன்.

நமது மறைபரப்புப் பணியில் இறைவன் நமக்கு அருளையும் ஞானைத்தையும் அளித்து நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்த்துவில் உங்கள்,

+ஆயர் யோசப் யீ தெக் க்வோங் D.D.

### வத்திகானில் இருந்து....

திருஅவையில் பொதுநிலையினரின் பங்கு, ஆயர்கள் மற்றும் அருள் பணியாளர்களுடனான அவர்களின் ஒத்துழைப்பு, முடிவெடுக்கும் செயல் முறைகளில் பொதுநிலையினரின் ஈடுபாடு குறித்தும் கடந்த வாரம் வத்திக்கானில் நிகழும் கூட்டொருங்கியக்கப் பயண ஆயர் மன்றப் பேரவையில் விவாதிக்கப்பட்டது என்றும் தெரிவித்தனர்.

திருஅவைப் பணிகளில் பாலியல் பாகுபாடுகளைத் தவிர்த்தல், பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்தல், முடிவெடுக்கும் செயல்முறைகள் மற்றும் செவிசாய்த்தலை முக்கிய பணியாக மேற்கொள்ளுதல் போன்றவை வலியுறுத்தப்பட்டதாகவும் செயலர் Sheila Pires கூறினார்

# சாட்சிய வாழ்வுக்கே சீடத்துவம் பதவிக்கல்ல!

இன்று ஆண்டின் 29ஆம் ஞாயிறு கொண்டாட்டத்தில் இருக்கிறோம். இன்றைய முதலாம் இரண்டாம் வாசகத்தில் பாடு களைப் பற்றிய விவரங்களைப் படித்தறிகிறோம். நற்செய்தியிலும் இயேசு தனது பாடுகளைக் குறித்து பேசுகிறார். இருப்பினும் யாகப்பரும் யோவானும் அப்போஸ்தலர் குழுவில் உயர் பதவி பெற இயேசுவிடம் முன்னெடுக்கின்றனர்.

"நீர் அரியணையில் இருக்கும்போது எங்களுள் ஒருவர் உமது இடப்புறமும் இன்னொருவர் வலது புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்" எனும் விண்ணப்பத்தை முன் வைக்கின்றனர். மாறாக அந்தச் சீடர்கள் இறை ஆட்சியில் சீடத்தன்மையின் கூறுகளை, பண்புகளை, தனித்தன்மையை உணரத் தவறிவிட்டனர் என்பதைக் அறிந்து கொள்கிறார்.
இவ்விரு சீடர்களும் தமது பாடுகளில் பங்கேற்று மாட்சிமை பெறத் தயாராக இருக்கிறார்களா என்று அறியவேண்டி "நான் குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் உங்களால்குடிக்க இயலுமா? நான் பெறும் திருமுழுக்கை உங்களால் பெற இயலுமா"என அவர்களைக் கேட்கின்றார்.

ஆம், `அண்ணன் எப்ப சாவான், திண்ண எப்ப காலியாகும்' என்பது போன்றதுதான் இரு சீடர்களின் நிலைமை. இயேசுவைப் போன்று மக்கள் தொண்டாற்ற முன் வரும் சீடர்கள் முதன் முதலில் தன் நிலை மறந்து, கீழ் நிலை இறங்கிதொண்டாற்ற அழைக்கப்படுகிறார்கள். பலர் பணம், அதிகாரம், நம்மைச் சுற்றி நான்கு பேர்கள் இருந்துவிட்டால் மக்களின் தொடர்பிலிருந்து விலகி இருப்பர்.

தொண்டாற்ற நன் சமூகச் சூழலில் பல தேவைகளும் வாய்ப்புக்களும் உள்ளன. ஆனால் பலருமே பிறர் தங்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென விரும்புகிறார்களே தவிர, பிறர் தேவைகளில் உதவிடும் பண்புள்ளவர் மிகச் சிலரே. அவ்வாறு தொண்டாற்ற முன்வருபவரே இயேசுவின் வழி சீடர்கள் என இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு அறிவுறுத்துகிறார்.

ஆம், கைம்மாறு கருதாமல் தொண்டு ஆற்றிய தலைவராம் இயேசுவின் வழிசென்று பணியாற்றும் சீடர்களே இன்றைய தேவையாகிறது. அத்தோடு இயேவைப் பின்பற்ற, சாட்சியம் பகர பிறரை அடக்கி ஆண்டு, பிறர் ஊழியத்தைப் பெற்று உயர்வடைய மாட்டார். மாறாக, தன்னையே ஒரு பணியாளாக்கி, பிறருக்கு சேவை செய்து உயர்வடைய வேண்டும் இதுவே இயேசு காட்டும் சீடத்துவத் தினசிறப்பான இயல்பாகும். நாமும் துன்பத்தின் வழியாக ஊழிய வாழ்வின் மூலமாக நிறைவு கொள்வோம். சீடத்துவத்தை ஆழப்படுத்துவோம். சாட்சிய வாழ்வுக்கே நாம் கொண்ட சீடத்துவம் என்பதை மூச்சு உள்ளவரை நினைவில் கொண்டு செயல்படுவோம்.

*ஆ.வி.டேவிட், குளுவாங்*

### பொதுக்காலம்-29-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசாயா 53:10-11 |
| திரு.பாடல் | 33: 4-5. 18-19. 20,22 |
| 2-ம் வாசகம் | எபி 4: 14-16 |
| மாற்கு | மாற்கு 10:35-45 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**